

பாமாலை 510 தூதர் வணங்கும் தேவன்

1 தூதர் வணங்கும் தேவன் மானிடர் மேல்
ஏன் அன்பு கொண்டார்? என்பதறியேன்;
அலைந்து திரிந்தோரை அன்பாய்த் தேடி
மேய்ப்பன் போல் மீட்டுக் கொண்டார்,
அறிவேன்
பெத்லகேம் முன்னணையை வீடாய்க் கொண்டு
மரியின் பாலனாகத் தோன்றினார்
சிற்றூராம் நாசரேத்தில் வாழ்ந்து வந்தார்
உலக இரட்சகர் இவர் , என்றறிவேன்.

2 இன்னலின் பள்ளத்தாக்காம் இவ்வுலகை
மெய்ச் சமாதானத்தால் நிரப்பினார்.
மௌனமாக நோவு, பாடுகள் ஏற்று,
சிலுவையில் திருப் பலியானார்.
இவரே நம் பாவப் பளுவை நீக்கி,
நீதியின் இளைப்பாறுதல் ஈவார்;
உடைந்த உள்ளங்களைச் சுகமாக்க
இதோ ! உலக இரட்சகர், இங்கே உள்ளார்.

3 அன்பால் மானிட உள்ளங்கள் நிரம்பி
மா பெரும் கோலாகலம் எழும்பும்,
விண், மண் எல்லாம் தேவனை வணங்கிடும்,
அவர் சொல்ல புயல்கள் அமையும்.
கெம்பீரித்து வானங்கள் பூரிப்பாகும்,
எண்ணற்ற மானிடக் குரல் பாடும்:
"அவரே ராஜா ! உலகின் நாள் மீட்பர் ! "
என்று கோளங்கள் யாவும் எதிரொலிக்கும்.